# நிறைமதி
# தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் மின்நூல் வழி புதிய அணுகுமுறை

**கோபிநாதன் சுப்ரமணியம்**
கல்வியல் தொழில்நுட்ப அதிகாரி
ஆசிரியர் நடவடிக்கை மையம், யொங் பெங், ஜோகூர், மலேசியா.

**முன்னுரை**

அறிவுடையவரே எல்லாம் உடையவர் என்பது திருவள்ளுவரின் அருள் வாக்காகும். இவ்வாக்கிற்கு ஏற்ற வண்ணம் அனைத்துத் தரப்பினரும் நிறையறிவினைப் பெறுவதற்கு இந்த நிறைமதி என்ற இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. பல்துறை சார்ந்த அறிவினைப் பெற, இது மாணவர்களுக்கு வழி வகுக்கும். பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் வாசகர்களுக்கும் பயனுடையதாக இருக்கும். வெறும் மூளைப்பதிவாக மட்டுமல்லாமல் இதயத்தின் ஆழ ஊடுருவி பாய்ந்து நிலைபெறும் தன்மையுடையதாக நிறைமதியின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

ஆசிரியர்கள் தங்களின் பாட போதனைக்கு நிறைமதி எனும் இக்களஞ்சியத்திலிருந்து தரவுகளை எடுத்து பயன்படுத்தி பலன் பெறலாம்.

கற்றாரே கண்ணுடையார், கற்றவனை அரசும் விரும்பும், கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற வைர வரிகள் கற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இவற்றினை மெய்ப்பிக்க இந்த நிறைமதி நற்றுணையாக இருக்கும் என்பது உறுதி.

இருளில் உலகிற்குக் குளிர்ச்சியான ஒளியை ஈவது நிலவொளியாகும். அவ்வண்ணம் வாசகர்களின் அறிவுத் தேடலுக்கு ஓர் அற்புதக் களமாக இந்த நிறைமதி இணையத் தளம் திகழும் என்பது திண்ணம்.

நிறைமதியில் இருக்ககூடிய மின்நூல் கணினி மூலமாகவும், கையடக்க சாதனங்கள் மூலமாகவும் படிக்க/வாசிக்க இயன்ற மின்னனு வடிவிலான பதிப்பு ஆகும். இம்மின்னூலானது முப்பரிமான (3D) அமைப்பு முறையை கொண்டிருக்கும். ஆகையால், இம்மின்நூலைக் கொண்டு புத்தக வடிவில் கவரும் வண்ணம் தரமான ஆவணங்கள் நிரந்தரமான ஆவணக் கோப்பைப் (PDF) பயன்படுத்தித் தயாரிக்கலாம். மேலும், படங்கள், பல்லூடகக்காட்சி, இசை, நாடகம் மற்றும் திரை போன்றவைகளை இணைத்துக் கொள்ளலாம். பல்வேறு வர்ணங்களையும் வடிவங்களையும் உபயோகப்படுத்தி மின்நூல் செய்வதன் மூலம் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின் போது மாணவர்களின் கவனத்தையும் ஈர்க்க முடிகின்றது.  இம்மின்நூல் மாணவர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் சலிப்புத் தன்மையைப் போக்கப் பெரிதும்

துணைப்புரிகிறது. மேலும், சுயக்கற்றலுக்கு வழிவகுக்குவதோடு நேரத்தையும் சிக்கனப்படுத்த உதவுகிறது.

நிறைமதியில்  உள்ளடங்கிய மின்நூல்கள்  6 பகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளன :

1) தேசிய பள்ளி

தேசிய பள்ளி கற்றல் கற்பித்தல் நடவடிக்கை உபயோகத்திற்கு இம்மின்நூல்கள் நிறைமதியில் உள்ளன. இதனை தேசிய பள்ளி போதிக்கும் ஆசிரியர்கள், பயிலும் மாணவர்கள், இம்மாணவர்களின் பெற்றோர்கள் எளிதில் கையாள முடியும். காரணம், இதில் உள்ள மின்நூல்கள் தேசிய பள்ளி பாடத்திட்டத்திற்கு உட்பட்டுள்ளது.

2) தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி

தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி கற்றல் கற்பித்தல் நடவடிக்கை உபயோகத்திற்கு இம்மின்நூல்கள் நிறைமதியில் உள்ளன. இதனை தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி போதிக்கும் ஆசிரியர்கள், பயிலும் மாணவர்கள், இம்மாணவர்களின் பெற்றோர்கள் எளிதில் கையாள முடியும். காரணம், இதில் உள்ள மின்நூல்கள் தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி பாடத்திட்டத்திற்கு உட்பட்டுள்ளது.

3) இடைநிலைப்பள்ளி

இடைநிலைப்பள்ளி கற்றல் கற்பித்தல் நடவடிக்கை உபயோகத்திற்கு இம்மின்நூல்கள் நிறைமதியில் உள்ளன. இதனை இடைநிலைப்பள்ளி போதிக்கும் ஆசிரியர்கள், பயிலும் மாணவர்கள், இம்மாணவர்களின் பெற்றோர்கள் எளிதில் கையாள முடியும். காரணம், இதில் உள்ள மின்நூல்கள் இடைநிலைப்பள்ளி பாடத்திட்டத்திற்கு உட்பட்டுள்ளது.

4) பாடல்கள்

அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தும் வகையில் இம்மின்நூல் பாடல் வடிவில் அமைந்திருக்கும். பாடல்கள் அறிவை ஊட்டுவதோடு மனமகிழ்வைத் தரும். மேலும், வாசகர்களை மென்மேலும் இம்மின்நூலைப் பயன்படுத்த வழிவகுக்கும்.

5) சமயமும் நன்னெறியும்

சமயத்தையும் நன்னெறியையும் அனைத்துத் தரப்பினரும் அறிந்துக்கொள்ள இம்மின்நூல் அமைந்திருக்கிறது. இணையத்தில் சமயமும் நன்னெறியும் நவீன உலகிற்கு ஒரு புதிய சகாப்தமாக கருதப்படுவதால் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் கதையின் வாயிலாக போதிக்கும்போது இவை மாணவர்களை கவருவதோடு மனமகிழ்வைத் தருகிறது.

6) தெளிவுரை

அனைத்துத் தரப்பினருக்கும் பயன்மிக்கவை. இணையம், சமுதாயம், இலக்கியம், விஞ்ஞானம், வரலாறு, ஆன்மீகம், பொழுதுபோக்கு, தகவல் தொழில் நுட்பம், கல்வி என விரல் நுனியில் விரியும் விவரக் களஞ்சியமாக இம்மின்நூல் அமைந்திருக்கும். நேரடி கனொலியாகவும் தொடர் நிகழ்வாக அமைந்திருக்கும். இணையம் தகவல் யுகத்திற்கு ஒரு காப்பியம்.

**சமூக வலைய இணையத்தளத்தில் நிறைமதி**

நிறைமதி இதோடு நின்றுவிடமால் சமூக வலைய இணைத்தளத்திலும் உலாவருகின்றது. அவற்றில் முகநூல் (Facebook), டிவிட்டர் (Twiter), வலைப்பூ (Blogger), கூகிள் ப்ளஸ் (Google Plus) மற்றும் தப்ளர் (Thumpler) போன்றவற்றிலும் ஒரே நேரத்தில் உலகம் முழுவதும் ஒரு தகவலை வெளிப்படுத்திவிடுவதற்கு ஒரு சிறந்த சாதனமாக விளங்குகிறது. நிறைமதிக்கு தேவையான நல்ல பல கருத்துக்கள், செய்திகள் போன்றவற்றை அறிவதற்கும், அறிவிப்பதற்கும் மிகவும் இலகுவான ஒரு பொறிமுறையாக இது கருதப்படுகின்றது.

**நிறைமதியின் எதிர்பார்ப்பு**

தொழில்நுட்பம் மூலம் உலகம் உங்களை இணைக்கின்றது என்ற பொன் வரிகளுக்கு ஏற்ப நிறைமதி மலேசியாவில் மட்டும் நின்றுவிடாமல் மற்ற நாடுகளுடன் இணையக் காத்திருக்கிறது. எனவே உலகெங்கும் இருக்கும் தமிழர்களையும், தமிழ்மொழி வழி இணையத்தையும் ஒன்றிணைப்பதே நிறைமதியின் நோக்கமாகும். ஒன்றிணைவோம் நிறைமதியின் வழி தமிழ்மொழியின் மாண்பை ஓங்கச் செய்வோம்.

“ நிறைமதி மனுகுலத்தின் அறிவுமதி ”